1971 டிசம்பர் 17]

manner and that there was some short-circuit as a result of which certain important cadgets and items in the Ennore Thermal Station got spoiled? May I know the loss sustained by the Government apart from the human loss?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, அங்கே கன்டென்சர் பொருத்தப்பட்டிருக்கிறது, மின்சார இணைப்பு வெளிச்சத்திற்கு. ஆனால் பெரும்பாலும், பாட்டரி விளக்குகளை வைத்துக்கொண்டே பரிசோதித்து வந்தார்கள். இவர் நிபுணர் என்பதால் இவர்கள் தானாகவே சோதனை செய்திருக்கிறார்கள். தவறி பக்கத்திலே இருந்த ட்ரான்ஸ்பார்மரின் கூரான பகுதி மண்டையில் அடித்து காயம் ஏற்பட்டு அதனால் பிற்பாடு இது ஏற்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே,, விசேஷமாக வந்திருந்த செக்கஸ்லோவேகிய நாட்டு எஞ்சினியர் காலமானதற்கு வருத்தம் தெரிவிக்கும் போது, அவருக்கு போதுமான சிகிச்சை அளிக்கப் பட்டதையும் தெரிவித்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, குறைபாடு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

வட ஆற்காடு மாவட்டத்தில் சந்தன மரங்களைக் கொண்டு தொழிற்சாலை

* 537 வின—திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள சந்தன மரங்களை அடிப்படையாகக்கொண்டு ஏதேனும் தொழிற்சாலை துவங்குகின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) வட ஆற்காடு மாவட்டம் உட்பட நமது மாநிலத்தில் ஒரு ஆண்டில் கிடைக்கும் சுமார் 300 டன் சந்தன மரக்கட்டைகளைக் கொண்டு, பொதுத் துறையில், கோயம்புத்தூர் மாவட்டம், பவானிசாகரில் ஒரு சந்தன எண்ணெய் தொழிற்சாலை ஏற்படுத்தலாமா என்பதற்கான செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் கிடைக்கும் சந்தன மரத்திற்கு கோயம்புத்தூரில் தொழிற்சாலை அமைக்கப் போவதாகச் சொல்கிறார்கள். வடாற்காட்டிலேயே அமைக்க ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா ? கோயம்புத்தூரில் அமைக்கவிருக்கும் திட்டத்தின் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, முதலிலே எங்காவது ஆரம்பிக்க பரிசீலனை செய்யப்படுகிறது. முடிந்த பிறகு, எந்த இடம் என்பதைப்பற்றி முடிவு செய்யலாம்.

சேவை இந்தியத் துணைக் கண்டத்திற்கே நம்முடைய மாநிலம் வழிகாட்டியாக இருக்கிற அளவுக்கு ஒரு சிறப்பை உருவாக்கி யிருக்கிறார்கள்.

1969-லே ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்கி, அந்தச் சிறப்புத் திட்டத்தின் மூலம் தமிழகம் பூராவும் ஒளிவிளக்குகள் ஏற்றித்தாப் படவேண்டும் என்பதாக நமது கலைஞர் அவர்கள் நமது மின்சார வாரியத்தில் உள்ளவர்களை ஈடுபடுத்தி வருகிற வேகத்தைப் பார்க்கிறபோது 72-க்குள்ளாக விளக்குகளே இல்லாத பகுதி இருக்காது என்ற மகிழ்ச்சி நமக்குத் தருகிறது. மின்சார விளக்கில்லாத கிராமமே நமது தமிழகத்தில் இருக்காது. நாட்டு மக்கள் ஒரு மகிழ்ச்சியான, ஒளிமயமான வாழ்வைப் பெறுவார் கள் என்கிற மகிழ்ச்சிப் பெருக்கு ஏற்படுகிறது. அதன் அடிப் படையில் தான் இன்றைக்குப் பல மாவட்டங்களிலே மின் விளக்கு அமைப்பு முழுமை விழாவைக் கொண்டாடி வருகிறோம். 72-ஆம் ஆண்டு இறுதிக்குள் மின்சார சப்ளை பூரணத் தன்மைபெறும் என்கிற அறிவிப்பு நம் காதுகளில் இனிமையாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. இந்த அடிப்படையை உணர்ந்து 1967 வரை இருபதாயிரம் சொச்சம் கிராமங்களுக்கே மின் இணைப்புத் தரப் பட்டிருந்தது என்றால் ஏறத்தாழ இதுவரை 43 ஆயிரம் கிராமப் பகுதிகளுக்கு அரசாங்கம் மின் இணைப்பைத் தந்திருப்பதைப் பார்க்கிறோம். இன்று எனக்கு முன்பு பேசியவர்களும், நேற்றைய முன்தினத்திற்கு முன்தினம் பேசியவர்களும் பலயிடங்களில் மின் விளக்குகள் எரியவில்லை என்று கூறிய புகார்களை எண்ணிப் பார்த்தால் ஒளி புகாத ஊர்களுக்கு எல்லாம் மின் விளக்குகள் வந்துவிட்டனவே, இதன் காரணமாக இந்த அரசுக்கு மக்கள் மத்தியில் பெருமை உண்டாகிறதே என்கிற எரிச்சல் காரணமாக— விளக்குகளே எரியவில்லை, எரியவில்லை என்று சொன்னார்களோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது. ஏறத்தாழ 43 ஆயிரம் கிராமங் களுக்கு ஒளி விளக்குகளை ஈட்டித் தந்திருக்கிறோம், போட்டுத் தந்திருக்கிறோம் என்றால் பல்லாயிரக்கணக்கான பல்புகள் அமைக்கப்பட்டிருக்கும். அவற்றில் ஒருசில எரியாமல் இருக்கலாம். அது அரசினர் குற்றமல்ல—ஆங்காங்கு வாழ்கிற மக்களின் குற்றமாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லா இடங்களுக்கும் விளக்குகளைப் போட்டுத் தர அரசு முயற்சிக்கின்ற அதே நேரத்தில் எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும், பொது மக்களாக இருந்தாலும் அரசுக்குக் கைகொடுக்கின்ற முறையில் அந்த விளக்குகளைப் பாதுகாத்து, பாராமரிக்க வேண்டிய பொறுப்பு அவர்களுடைய தாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒளிவிளக்குகளை அமைத்துத் தருவதில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகம் இரண்டாவதாக இருக்கிறது, முதலாக இருப்பது ஹரியானா என்று சொன்னால் அந்த ஹரியானா தமிழகத்தில் 3-இல் ஒரு பங்குதான். ஆகவே இந்தியாவுக்கே தமிழகம் வழிகாட்டியாக இருக்கிறது என்று சொல்லலாம்.